Shikshan Sanshodhan : Journal of Arts, Humanities and Social Sciences ISSN(o): 2581-6241
Monthly, Peer-Reviewed, Refereed, Indexed Journal Impact Factor: 9.134
Volume - 9, Issue - 7, July - 2026

DOIs:10.2018/SS/202607009 --:-- Research Paper / Article / Review

சங்க இலக்கியச் சூழலியலில் வாழை மரமும் மக்கள் வாழ்வியலும்

முனைவர் இரா.மதன்ராஜ்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
சீனிவாசன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
பெரம்பலூர்.621 212.
E.mail : mathantamil91gmail.com

ABSTRACT: *Ancient Tamils maintained a close and harmonious relationship with nature, considering plants, animals, and birds as integral components of their social and ecological environment. Among the various plant species, the banana tree (Musa spp.) occupies a significant position in Tamil culture and traditional life. The banana plant is highly valued because every part of it, from the root to the fruit, serves multiple purposes and contributes to human welfare. It plays an essential role in food practices, religious rituals, cultural traditions, and socio-economic activities. Tamil literary works portray the banana tree not only as a source of nourishment but also as a symbol of kinship, prosperity, and sacredness, often associated with temple traditions and ritual practices. From the Sangam period to the contemporary era, the banana tree has remained an indispensable element of Tamil society and cultural heritage. This study examines the representation and significance of the banana tree in Tamil literature, particularly focusing on its cultural, ecological, and symbolic dimensions as reflected in classical and later literary traditions.*

Keywords: *Sangam Literature; Ettuthokai; Pattuppāṭṭu; Banana Tree (Musa spp.); Tamil Culture; Ecological Heritage; Traditional Knowledge; Tamil Society; Cultural Symbolism; Human–Nature Relationship.*

ஆய்வுச்சுருக்கம்

பண்டைத் தமிழர்கள் தாவரங்கள், விலங்குகள், பறவைகள் போன்றவற்றை உறவாக எண்ணி நேசித்து வந்தனர். அவர்களுடைய வாழ்க்கைச் சூழலியலில் தாவரங்கள் மிக இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றன. அவற்றில் ஒன்று தான் வாழைமரம் ஆகும். மக்கள் வாழ்வியலில் அடி முதல் அனைத்துப் பாகங்களையும் மனிதர்களுக்குப் பயன்படும் வகையில் வாழைமரம் மனித வாழ்வியல் சூழலுக்கு உதவுகின்றன. இலக்கியங்களில் வாழைமரமானது உணவாக, உறவாக, வழிப்பாட்டுத் தல மரமாகக் காணப்படுகின்றன. சங்க காலம் முதல் தற்காலம் வரை வாழையானது மக்கள் வாழ்க்கையில் ஓர் முக்கிய அங்கமாகத் திகழ்கிறது.

திறவுச் சொற்கள்

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, வாழையின் பாகங்கள், தல மரம், தலைவன், தலைவி, பொது மக்கள் போன்றவர்கள்.

முன்னுரை

சங்க இலக்கியங்களில் மக்கள் வாழ்க்கை முறையில் மரங்கள் முதன்மையான இடத்தைப் பெறுகின்றன. அவற்றில் வாழை மரமும் ஓர் அங்கமாகத் திகழ்கிறது. வாழை

மரத்தின் தண்டு, இல்லை, பூ, காய், கனி என அனைத்து உறுப்புகளும் உணவுப் பொருளாகப் பயன்பட்டதையும் சுப நிகழ்ச்சிகளிலும், கலாச்சாரத்திலும் இன்றியமையாததாகக் காணப்படுகிறது. வாழை மரத்தின் அனைத்து உறுப்புகளும் மக்களுக்கு உணவு பொருளாகப் பயன்படுகின்ற மங்களத் தன்மையுடையதான வாழ்வியலை அறியமுடிகிறது.

சூழலியல் விளக்கம்

சூழலியல் என்பதனை ஆங்கிலத்தில் **"Ecology"** என்று அழைப்பர். Ecology என்னும் சொல் கிரேக்க மொழியைத் தழுவியது. இது **"ஆய்கோஸ்"** மற்றும் **"லோகஸ்"** ஆகிய இரண்டு சொற்களால் ஆனது. ஆய்கோஸ் என்னும் சொல் வீடு அல்லது வாழும் இடத்தைக் குறிக்கிறது. இது பொதுவான உயிரினங்களை அவை வாழுமிடத்தில் படிப்பது என்று பொருள்படும். Ecology என்னும் சொல் விலங்கியல் வல்லுநரான ரெய்ட்டெர் என்பவாரால் 1885 இல் முன்மொழியப்பட்டது.

- பிரிட்டனிகா தகவல் களஞ்சியம் **"உயிரினங்களுக்கும் அவற்றின் சூழலுக்கும் இடையிலுள்ள தொடர்புகளைப் பற்றிய ஆராய்ச்சி"**[1] என்று விளக்கமளிக்கிறது.
- Ecology என்பதனை Cambridge Dictionary **"The relationships between the air, land, water, animals, plants, ect. usually of a particular area, or the scientifc study of this"**[2] என்று குறிப்பிடுகிறது.

வாழை மரத்திற்கு வழங்கும் வேறு பெயர்கள்

வாழை மரத்தின் தாவரவியல் பெயர் **"Musaparad isiaca"**[3] என்று அரிஸ்டாட்டில் குறிப்பிடுகிறார். வாழை மரத்திற்கு **"தீர்க்கபரணி, அரம்பை, சேகிலி, மிருத்தியுபலை,வாரணபுசை, மஞ்சிபலை, கவர், காட்டிலம், காவற்கலி, வீரை, அங்குசம், அம்பணம், வாரபுசை, அரேசிகம், அற்பருத்தம், ரசதாளி, ஓசை, தந்துவிக்கிரியை, திரணபதி, தென்னி, வல்லம், வனலட்சுமி, கதலம், தீர்க்கவில்லை, மாலரம்பை"**[4] எனப் பல்வேறு பெயர்களை சா.அனந்தகுமார் பட்டியலிடுகிறார்.

தமிழர் வாழ்வில் வாழை மரம்

பண்டைத் தமிழர் வாழ்வில் இல்லத்திலும், வயல்களின் ஓரங்களிலும், ஊர் மன்றங்களிலும் வாழை மரம் மக்களுக்குப் பயன்படுகின்ற ஒன்றாய் அமைந்திருந்தது. **"மனிதனின் இருப்பிடத்தில் கட்டாயமாக இருக்க வேண்டிய மரம் இந்த வாழை. நுனி முதல் அடி வரை அனைத்துப் பாகங்களும் பல வழிமுறைகளில் பயன்தரக் கூடியது"**[5] என்று ஆர்.கே.பாரதநேசன் கூறுகிறார். இதன் மூலம் மக்கள் வாழ்வியலில் வாழை மரம் முழுமையாகப் பயன்படுகின்ற வாழ்வியலைக் காணமுடிகிறது. மேலும், **"தமிழர்களின் வாழ்வியலில் பிறப்புத் தொடங்கி இறப்புத் தாண்டியுள்ள அனைத்துச் செயல்பாடுகளிலும் இரண்டறக் கலந்திருப்பது இந்த வாழை"**[6] என்று ஆர்.கே.பாரதநேசன் வாழையின் அனைத்துப் பகுதியும் மக்களுக்குப் பயன்படுவதைக் குறிப்பிடுகிறார்.

வாழ்விடங்களில் வாழை

சங்க கால மக்கள் தங்கள் வீட்டைச் சுற்றி வாழை மரங்களை நாட்டுப் பயன்பெற்றுள்ளனர். மகளிர் பச்சை அவலை இடித்துவிட்டு உலக்கையை அருகிலுள்ள வாழை மரத்தில் சார்த்திவிட்டு வள்ளைப் பூவைப் பறிக்கச் செல்வர். இதனை,

"அவல் எறி உலக்கை வாழைச் சேர்த்தி

வளைக் கை மகளிர் வள்ளை கொய்யும்”[7]

என்று பதிற்றுப்பத்துப் பாடல் தெரிவிக்கிறது. மகளிர் தங்கள் வீட்டில் வாழை மரம் வளர்த்து அதனை உணவாகப் பயன்படுத்தி இயற்கைச் சூழலியலோடு வாழ்ந்து வந்த வளமான சூழலியலை அறியமுடிகிறது. வாழையின் இயல்பினை, **“வாழையின் புறத்தடை, தண்டு, காய், இலை, பழம் அனைத்தும் பயன்தரும் பொருள்களே. ஆனால் அது தன் வாழ்க்கையில் ஒரு முறைதான் குலை தள்ளும், பின்பு மரம் மடிந்து விடும்”**[8] என்று ச.வே.சுப்பிரமணியன் குறிப்பிடுகிறார். இதனை,

“விளைக் குரலும் விளிசங்கொலியும் வீழ்வின்னொலியோவோ
மூளைத்தளை கொண்டடியா ரேத்தப் பொடியா மதியென்தார்
ஈளைப்படுகில் இளையார் தெங்கிற் குலையார் வாழையின்
பாளைக் கமுகின் பழம்வீழ் சோலைப் பழன நகராரோ”[9]

என்று தேவாரப் பாடல் வாழை மரத்தைத் தலமரமாகக் கொண்ட சூழலியலை உணரமுடிகிறது. வாழை மரம் மக்களுக்கு உணவாகப் பயன்படுகின்ற சூழலைப் போல் இக்காலத்தில் இறைவனுக்குத் தலமரமாகக் கோவில்களில் காணப்படுகின்ற சூழலியலை அறியமுடிகிறது.

சூழலியலில் வாழைக் காய்கள்

தமிழர்களின் உணவுகளில் வாழைக் காய்கள் இன்றியமையாத இடம்பெறுகிறது. வாழைக் காயினைச் சமைத்து உண்டு வர உடல் வெப்பம், வயிற்றுளைச்சல், இருமல் நீங்கும் என்கின்றனர். உடலுக்கு வலிமையைத் தருவதாக இயற்கை மருத்துவர்கள் கூறுகின்றன. இன்றும் தமிழர்களின் உணவு முறைகளில் மிகுதியாகப் பயன்படுத்தக்கூடிய காய்களில் வாழைக் காயும் ஒன்றாகும். இதனை,

“பல்வேறு உருவின் காயும் பழனும்”[10]

என்று மதுரைக்காஞ்சி கூறுகிறது. மக்கள் உணவாக வாழைக் காயினை உண்ணுகின்ற வாழ்க்கைச் சூழலியலைக் காணமுடிகிறது. மேலும், **“வாழைக் காய் அமாவாசை தினத்தில் அனைவரும் உண்ணுகின்ற காயாக இருப்பதால் அதை அமாவாசை காய் என்று அழைப்பதுண்டு”**[11] என்று ஆர்.கே.பாரதநேசன் குறிப்பிடுகிறார். இதன் மூலம் மக்கள் வாழ்வியலில் வாழைக் காய் மிக இன்றியமையாத உணவுப் பொருளாகப் பயன்பட்ட சூழலியலைக் காணமுடிகிறது.

சூழலியலில் வாழைப் பழங்கள்

நாவிற்கு இனிமையும் உடலுக்கு வலுவையும் கொடுப்பது வாழைப்பழம் ஆகும். வாழைப்பழங்கள் மிகுதியான இரும்புச் சத்துக்களை கொண்டுள்ளன. மலிவான விலையில் எங்கும், எப்போதும் கிடைக்கக் கூடியதான இவை உடலுக்கு ஆரோக்கியத்தையும், செரிமானத்தையும், மலச்சிக்கலையும் போக்கும் இயல்பினை உடையன. இதனை,

“குலை முதிர் வாழைக் கூனி வெண்பழம்”[12]

என்று பெரும்பாணாற்றுப்படை வாழைப் பழத்தைச் சிறப்பிக்கிறது. முதிர்ந்த வாழைப் பழத்தை விருந்து உபசரிப்பிற்கு மக்கள் பயன்படுத்தும் சூழலியலைக் காணமுடிகிறது.வாழைப் பழம் உணவாகவும், இறைவழிபாட்டுப் பொருளாகவும் மக்கள்

வாழ்வியலில் இரண்டறக் கலந்திருக்கிறது. **"உலகளவில் அதிக மக்களால் சாப்பிடப்படும் பழங்களில் வாழைப் பழமும் ஒன்று"**[13] என்று ஆர்.கே.பாரதநேசன் வாழைப் பழத்தின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுகிறார். தமிழர்தம் வாழ்வியலில் மங்கள , அமங்கள நிகழ்வில் வாழைப் பழம் தவறாது இடம்பெறுகிறது.

சூழலியலில் வாழை இலைகள்

தமிழ்ச் சமூகத்தில் உணவு உண்ணும் முறை இலைகளில் தான் முதன் முதலில் தொடங்கியுள்ளது. வாழை இலை என்று சொன்னாலே நினைவில் வருவது அறுசுவை உணவுதான். நம் பாரம்பரியமாக உணவுண்ணும் வழக்கத்தில் வாழை இலைகள் தலையாயது ஆகும். வாழை இலையில் உணவு உண்டால் நல்வாழ்க்கை அமையும் என்பது தமிழர்களின் நம்பிக்கை ஆகும். வாழை இலைகள் சூடான உணவு உண்ணும் போது துவர்ப்புச் சுவை மறைமுகமாக உணவில் சேர்ந்து மனிதனுக்கு பல்வேறு நன்மையினைத் தருகிறதென்று நம்புகின்றனர். இதனை,

"மரை ஆன் கறந்த நுரை கொள் தீம்பால்

மான்தடி புழுக்கிய புலவு நாறு குழிசி

வான்கேழ், இரும்புடை கழாஅது ஏற்றி

சாந்த விறகின் உலித்த புன்கம்

கூதளம் கவினிய குளவி முறையில்

செழுங்கோள் வாழை அகல் அழைப்பகுக்கும்

ஊராக் குதிரைக் கிழவ"[14]

என்னும் புறநானூற்றுப் பாடல்வழி மரை என்ற பசுவின் பாலில் தினையைச் சமைத்து வாழை இலையில் அனைவரும் பகுத்துண்ணும் வாழ்வியல் சூழலியலை அறியமுடிகிறது. **"உணவுக் கலாச்சாரத்தில் வாழைக்கு முக்கியப் பங்கு உண்டு. உலகளாவிய மானுட இனங்களில் உணவு உபசரிப்பில் தமிழர்களுக்கு நிகர் யாரும் இல்லை என்பதை நிரூபிப்பது தலை வாழை விருந்து. கொடுக்கப்படுகின்ற உணவு தூய்மையான பாத்திரத்தில் கொடுக்கப்பட வேண்டும். அதற்காகவே தலை வாழையில் உணவு பரிமாறப்படுகின்றது. கடவுளுக்கும் படையல் படைப்பதும் இந்த தலை வாழையில் தான். தமிழர்கள் அறுசுவை விருந்து படைக்கும் பழக்கம் உடையவர்கள். துவர்ப்புச் சுவை சமைக்கின்ற உணவில் இராது. எனவே தலை வாழை இலையில் சூடான சாதம் பரிமாறி துவர்ப்புச் சுவை மறைமுகமாகக் கிடைக்கச் செய்தனர்"**[15] என்று வாழை இலையின் மருத்துவக் குணத்தையும் இன்றியமையாமையும் ஆர்.கே.பாரதநேசன் குறிப்பிடுகிறார்.

சூழலியலில் வாழைத்தண்டு

வாழை மரம் நீரில் மிதக்கும் தன்மை கொண்டது. இதைப் பிடித்துக் கொண்டு ஆண்கள், சிறுவர்கள் நீர்நிலைகளில் விளையாடி மகிழ்வார்கள். இதனை,

"தண்டித் தண்டின் தாய்ச் செல்வாரும்"[16]

என்று பரிபாடல் கூறுகிறது. நீராடலில் களைப்படையாத மைந்தர்களில் சிலர் மேலும் நீராட விரும்பி வாழைத் தண்டினைத் தழுவிக் கொண்டு நீரின் மேல் தாவித்தாவிச் சென்று விளையாடி தங்களுடைய உடலை வலுப்படுத்தியும் உள்ளத்தை அமைதிப்படுத்தியச் சூழலியலை அறியமுடிகிறது. **"வாழ் என்னும் அடியை உடையது வாழை"**[17] என்பார் கோவை.இளஞ்சேரன். அதனால் தான் மக்கள் வாழ்கையில் மிகவும் பயன்படும் மரங்களில் வாழை மரமும் இடம்பெற்றது. **"வாழை மருந்தாகவும் உணவாகவும் இருந்த காரணத்தால் தான் இதை வனலட்சுமி என்கின்றனர்"**[18] என்று அரிஸ்டாட்டில் குறிப்பிடுகிறார்.

முடிவுரை

மக்கள் வாழ்வியலில் தாவரங்கள், விலங்குகள், பறவைகள், உயிர் உள்ளவைகள், உயிர் இல்லாதவைக்களுக்கும் மனிதர்களுக்கும் இடையேயான உறவுமுறைகளை சங்க இலக்கியங்களில் சூழலியல் வாயிலாக உணரமுடிகிறது. வாழை மரம் மக்கள் வாழ்க்கைச் சூழலியலில் காயாகவும், கனியாகவும், இலையாகவும், தண்டாகவும் பயன்பட்டு அவர்களின் வாழ்வியலில் ஒன்றிப் போன மிக இன்றியமையாத மரமாக இருந்த சூழலியலை அறியமுடிகிறது. இன்றைய காலக் கட்டத்தில் நாம் நவீனத்துவத்தை நோக்கி சென்றாலும் பண்டைத் தமிழர்கள் கடைபிடித்த நல்ல வாழ்வியல் நெறிமுறைகளை அன்று முதல் இன்று வரை நாம் பின்பற்றி இயற்கையை நேசித்து வளமான வாழ்வை வாழ்வதற்கு தாவரங்கள் வழிவகுக்கின்றன.

சான்றெண் விளக்கம்

1. பிரிட்டானிகா தகவல் களஞ்சியம், தொகுதி - மூன்று, ப.189.
2. cambridge university press,p.396.
3. அரிஸ்டாட்டில்,வாழ்வு தரும் மரங்கள்,ப.159.
4. சா.ஆனந்தகுமார்,தாவரங்கள் விலங்குகள் பறவைகளைக் குறிக்கும் பல்வேறு பெயர்கள்,ப.44.
5. ஆர்.கே.பாரதநேசன்,மனிதனுக்கு எல்லாமே மரம் தான்,ப.8.
6. மேலது,ப.8.
7. அ.ஆலிஸ்,பதிற்றுப்பத்து,பா.29:1-2.
8. ச.வே.சுப்பிரமணியன்,தமிழர் வாழ்வில் தாவரம்,ப.30.
9. திருஞானசம்பந்தர், தேவாரம்,பா.6.
10. இரா.மோகன்(உ.ஆ.),மதுரைக்காஞ்சி,அ.529.
11. ஆர்.கே.பாரதநேசன்,மனிதனுக்கு எல்லாமே மரம் தான்,ப.13.
12. இரா.மோகன்(உ.ஆ.),பெரும்பாணாற்றுப்படை,அ.359.
13. ஆர்.கே.பாரதநேசன்,மனிதனுக்கு எல்லாமே மரம் தான்,ப.11.
14. கு.வே.பாலசுப்பிரமணியண்(உ.ஆ.),புறநானூறு,பா.163:8-14.
15. ஆர்.கே.பாரதநேசன்,மனிதனுக்கு எல்லாமே மரம் தான்,ப.11.
16. பெ.சுப்பிரமணியன்(உ.ஆ),பரிபாடல்,பா.10:100.
17. கோவை.இளஞ்சேரன்,இலக்கியம் ஓர் பூக்காடு,ப.684.
18. அரிஸ்டாட்டில்,வாழ்வு தரும் மரங்கள்,ப.161.

துணைநூற் பட்டியல்

1. அரிஸ்டாட்டில்.ஆர்.எஸ்.வாழ்வு தரும் மரங்கள்,தாமரை பப்ளிகேஷன்ஸ்.சென்னை.ஐந்தாம் பதிப்பு-2015.

2. ஆலிஸ்.அ.(உ.ஆ.),பதிற்றுப்பத்து, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்,சென்னை,ஐந்தாம் பதிப்பு.2014.
3. அனந்தகுமார்.சா, தாவரங்கள் விலங்குகள் பறவைகளைக் குறிக்கும் பல்வேறு பெயர்கள், அறிவுப் பதிப்பகம், சென்னை.இரண்டாம் பதிப்பு-2011.
4. இளஞ்சேரன்.கோவை,இலக்கியம் ஓர் பூக்காடு,இராக்கோர்ட்டு பப்ளிகேசன்,சென்னை.1982.
5. சுப்ரமணியன்.ச.வே, தமிழர் வாழ்வில் தாவரம், மெய்யப்பன் பதிப்பகம்,சிதம்பரம்,முதற் பதிப்பு-2014.
6. சுப்பிரமணியன்.செ.(தொ.ஆ.), பிரிட்டானிகா தகவல் களஞ்சியம், தொகுதி - மூன்று, என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா(இந்தியா) பிரைவேட் லிமிடெட்,புதுடெல்லி.
7. சுப்பிரமணியன்.பெ.(உ.ஆ.),பரிபாடல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்,சென்னை,ஐந்தாம் பதிப்பு.2014.
8. திருஞானசம்பந்தர்.ச.(உ.ஆ.),தேவாரம், தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.திருநெல்வேலி.பதிப்பு-1967.
9. பாரதநேசன்.ஆர்.கே,மனிதனுக்கு எல்லாமே மரம் தான், மணிமேகலை பிரசுரம்,சென்னை,முதற்பதிப்பு-2017.
10. பாலசுப்பிரமணியன்.கு.வே,(உ.ஆ.),புறநானூறு.நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி.) லிட்.சென்னை.ஐந்தாம் பதிப்பு - 2014.
11. மோகன்.இரா,(உ.ஆ.), பெரும்பாணாற்றுப்படை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்,சென்னை,ஐந்தாம் பதிப்பு.2014.